# சமுதாயவியல் நோக்கில் ஆவேசம் சிறுகதையில் விடுதலை சிந்தனைகள்

*முனைவர் லெ. ரேவதி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி (தன்னாட்சி)
கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8989

## முன்னுரை

திருச்சபையில் காணப்படுகின்ற உயர் வர்க்கத்தினரின் ஆதிக்கத்தினையும், அதிகாரப் போக்கினையும் நிறுவனத் திருச்சபையின் ஆளுகையினையும், தகர்த்துச் சுதந்திரமாகச் செயல்பட வைப்பது விடுதலை இறையியலின் இன்னொரு மையப் புள்ளியாகும். திருச்சபையில் பின்பற்றப்படும் வழிபாடுகள், விழாக்கள் முதலானவற்றைத் தகர்த்து விடுதலையை இலக்காகக் கொண்டு செயல்படுவதாகும். அத்தகைய வகையில் மாற்குவின் “ஆவேசம்” சிறுகதைகள் விடுதலை இறையியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாக இக்கட்டுரை அமைந்துள்ளன.

## புறக்கணிப்பு

“ஆவேசம்” சிறுகதைகளில் திருச்சபையில் காணும் அதிகார அமைப்பினைத் தலித் மகள் தகர்க்கும் நிகழ்வுகளை “மாற்கு” பதிவு செய்துள்ளார். “புறக்கணிப்பு” எனும் சிறுகதையில் தலித் மக்கள் ஒன்றாக இணைந்து நீதிஞாயிறு வழிபாட்டைப் புறக்கணிப்பு செய்தனர். இவ்வாறு குருக்கள் மற்றும் திருச்சபையின் தலைவர்கள் ஆதிக்கம் செய்வதைத் தகர்க்கின்றனர்.

சாமி... திருச்சபையில் தலித் கிறஸ்தவங்க நிலையை கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. தலித் கிறிஸ்தவர்களாகிய எங்க மக்களுக்குக் கோயில் தனி இடம், புசைக்கு உதவி செய்ய முடியாது. வாசகம் வாசிக்கக் கூடாது. பாடகர் குழுவிலும், பாதம் தழுவும் சடங்கிலும் பங்கு கொள்ளக் கூடாது. தேர் எங்க தெருவுக்கு வரக்கூடாது. தனித்தனிக் கல்லறை . . . சாமி. இன்னும் எத்தனை இடங்கள்ல் இது மாதிரி இருக்கு? சரி . . . அதுதான் போகட்டும் . . . திருச்சபையில் 70 சதவிகிதம் இருக்கும் எங்களில் யாரும் சாமியாராக்கூட ஆக முடியாது. அப்படியே ஒரு சிலர் சாமியாரா ஆனாலும் அவர்களுக்குத் திருச்சபையில எந்தப் பதவியும் கிடைக்காது. இந்த அநியாயங்களெல்லாம் திருச்சபையில் இருக்கு. இந்தத் திருச்சபை அநியாயங்களைப் போக்காம அரசாங்கம் செய்கிற அநியாயத்தை மட்டும் சுட்டிக் காட்டி நீதிஞாயிறு கொண்டாடுவது எந்த விதத்திலும் நியாயம்? என்று ஒருவர் காரசாரமாக கூறுவதை மாற்கு படைக்கிறார்.

மேலும் "விதை" என்னும் சிறு கதையில் புதிதாக வந்த குருவும் உயர் சாதிக் கிறத்தவர்களும் தலித் மக்களுக்கு எதிராகவே செயல்பட்டனர். தலித் மக்களுக்கு பழைய குருவானவர் ஆதரவு அளித்தார். ஆனால், அவரை மாற்றியவுடன் புதிய குருவைத் தங்களுக்கு தேவையில்லை என முடிவு செய்தனர்.

மேலும் "பரிகாரம்" சிறுகதையில் திருவிழாக்களிலும் வழிபாடுகளிலும் திருச் சபையில் குருக்களுக்கு உதவியாக உயர்சாதிக் கிறித்தவர்களே இருந்தனர். திருவிழாக்களில் தேர்ப்பவனி உயர்சாதிக் கிறத்தவர்களின் தெரு வழியாக மட்டுமே உலா வருகிறது. தலித் கிறித்தவர்களிடமிருந்து திருவிழாவிற்கென்று வரி வாங்குவதில்லை. அவர்கள் தேரினைத் தொடக்கூடாது. விளக்கினைத் தூக்கும் பணியினைத் தலித் கிறத்தவர்களே செய்ய வேண்டும். இதுபோன்ற ஒடுக்குமுறைகளால் வெகுண்டெழுந்து விழிப்புணர்வு பெற்ற மக்கள் திருச்சபையின் அதிகார அமைப்பினையும், ஆதிக்கத்தினையும் வெறுத்தனர். திருச்சபையில் நடக்கும் சாதிய ஒடுக்குமுறைகளைத் தகர்க்கப் போராட்டம், புசைப் புறக்கணிப்பு போராட்டம் இயக்கமாதல் முதலானவற்றில் ஈடுபட்டனர். இதன் மூலம் தலித் மக்கள் தம் வாழ்க்கையில் செயல்படுத்தியதை ஆவேசம் சிறுகதைகள் மூலம் அறிய முடிகிறது.

## மனிதநேயத்தை மையப்படுத்துதல்

மனிதன் தனித்து வாழ முடியாது. சமுதாயமாய் இணைந்தும், சமுதாயத்தைச் சார்ந்தும் வாழ்ந்தாக வேண்டும். சமுதாயம் நலமும் வளமும் மிக்கதாய் விளங்கவும், சீர்பட இயங்கவும், மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு, தேவையான உதவியினைச் செய்து வாழ்வதே மனித நேயமாகும்.

தனிமனித நலனில் அக்கறை காட்டுவதும், மக்கள் சமநீதியுடன் வாழ வழிவகுப்பதும், மனிதனுக்கும் அவனது உணர்வுகளுக்கும் முதலிடம் கொடுப்பதுமே விடுதலை இறையியலின் மனித நேயச் செயல் பாடாகும்.

இயேசுவின் மனித நேயச் செயல்பாட்டை முன் வைத்து தலித் மக்களின் விடுதலைக்காக மனிதநேயச் செயல்பாட்டுடன் செயல்பட தலைமை கன்னியரிடம் வலியுறுத்தும் நோக்கினை "விதை" எனும் சிறுகதையில் காண முடிகிறது. இதனை "தலித் மக்களோடு ஒன்னா இருப்பதும் தான் நமது ஆன்மீக வாழ்வு. மனிதனை மனிதனாக மதிக்காத இடத்துல் புசையில கலந்து கொள்வதுதான் மிகப் பெரிய பாவம்" (மாற்கு, பக். 12, 13) என்று சின்ன சகோதரி தலைமை சகோதரியிடம் கூறுவதை மாற்கு காட்டுகிறார்.

## பிறர் நலனில் அக்கறை கொள்ளுதல்

பிறருக்காக வாழ்வதும், பிறர் நலனில் அக்கறை கொள்வதும், மனித நேயமாகும். ஏழைகள் நலனில் அக்கறை கொண்டு, அவர்கள் நலனுக்காகவே வாழ்வது, அவர்களுக்காகவே உயிர்விடுவது போன்ற மனித நேயச் செயல்பாடுகள் மூலம் விடுதலை இறையியல் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

இதனை "விதை" எனும் சிறுகதையில் "பிறருக்காக வாழ்ந்து தான் அன்பு" என்ற இயேசுவின் செயல்பாட்டை உணர்ந்த சின்ன சகோதரி "நான் போறேன்.. நான் தலித் மக்களிடமே போறேன். அவுங்க போராட்டத்துல கலந்துக்கிறேன். ஏன்னா அங்க தான் கடவுள் இருக்கார்" (மேலது ப. 15) என்று சின்ன சகோதரி கூறுவதாக "விதை" சிறுகதை கூறுகிறது.

## ஏழைகளுக்காகத் தியாகம் செய்தல்

ஏழைகளின் நலனுக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்யும் மாமனிதனின் பண்பின்

மூலம் மனித நேயத்தை மையப்படுத்தும் விடுதலை இறைவியலை மாற்கு சிறுகதையில் காண முடிகிறது. இதனை,

"துன்பத்திலும் வேதனையிலும், ஏழ்மையிலும் வாழும் குழந்தைகளுக்கு உழைப்பதில்தான் வாழ்வின் பொருள் இருக்கிறது. இதுதான் ஏழையாக வாழ்ந்த கிறிஸ்துவின் வழி என்பதை உணர்ந்தாள்" (மேலது, ப.53) என்று சகோதரி இசபெல் எண்ணியதாக "ஒரு கான்வென்ட்டுக்கு வெளியே" எனும் சிறுகதை உணர்த்துகிறது.

### இறையரசு அமைக்க வழி கோலுதல்

இறையரசு என்பதற்கு விளக்கம் அளித்து சமுதாயத்தில் இறையரசினை அமைக்க விடுதலை இறையியல் வழி கோலுகிறது.

இறையரசு என்பது மக்களின் மன அமைதி, சமாதானம் ஒருவர் மீது கொள்ளும் அன்பு என்பவற்றை உள்ளடக்கியதும், எல்லா மக்களின் சுபிட்சமான, முழுமை பெற்ற வாழ்க்கையைச் சுட்டிக் காட்டுவதும் ஆகும். இன்னும் விரித்து விளக்கினால் மனிதனின் உடலும் ஆன்மாவும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது, திருப்தி அடைவதாகும். மேலும் மனிதன் தனது பசி, தாகத்தைத் தீர்த்து, யோசிப்பதிலும், பேசுவதிலும் தனது ஒவ்வொரு செயலிலும் எல்லோர் மீதும் அன்பு காட்டுவது, அநீதியைப் போக்கி நீதியையும் சமத்துவத்தையும் நிலை நாட்டுவது எங்கும் மகிழ்ச்சியைப் பரப்புவதுதான் இறையரசு ஆகும்.

மேற்காணும் கருத்தையே "இறையரசு அன்பின் அரசு, நீதி ஆட்சி செலுத்தும் அரசு, ஏழை, பணக்காரன் வேற்றுமை இல்லாத குடும்பம்" என ஜோன் பிரான்சிஸ் என்பவரும் ஒத்துக் கொள்வதை அறிய முடிகிறது.

### முடிவுரை

திருத்தந்தையர்கள் ஏழை மக்களுக்கு உதவுவதின் மூலம் இறையரசினை சமுதாயத்தில் கொண்டு வர வேண்டும். நீதி, சமத்துவம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என தலித் விடுதலை இறையியல் வலியுறுத்துகிறது. உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரிடம் பரப்பி வைத்திருந்த சமய மூட பழக்கங்களைத் தகர்க்கிறது. தங்களைத் தாங்களே ஒடுக்கிக் கொள்ளக் கூடிய செயல்களைக் கண்டிக்கிறது. எனவே ஆவேசம் சிறுகதையில் சமுதாயவியல் கோட்பாடுகளை வெளிக் கொணரும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.